RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-22263

# பெரியபுராணத்தில் வழிபாட்டு மரபு

**அ. மணிகண்டபூபதி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம், திண்டுக்கல்-624302, தமிழ்நாடு, இந்தியா

# The Tradition of Worship in Periyapuranam

**A. Manikandapoopathi [a, *]**

[a] Department of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University), Dindigul-624302, Tamil Nadu, India

* Corresponding Author:
tamilmathi11031993@gmail.com

Received: 27.09.2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Since ancient times, discourse on God has been widespread. The idea and worship of God did not arise suddenly. We know that these things occurred in people's lives tens of thousands of years ago, either because of fear or other difficulties. When these occur out of fear, it is also seen that the deities also undergo many dimensions. At each time, the deities evolved from the worship of nature and many other dimensions, so that human modulation and embodiment were acquired to be worshipped and revered. When those who were in nomadic communities became status-dwellers, the deity for them also became established. It became their custom to worship those deities at specific times. The deities have been worshipped in two different positions in the concept of opposites, such as pooja offering milk and sacrificing animals. When the deities become institutional religions and goddesses in such a worshipable environment, people accept them as well. Just as people's lives change with each passing time, so has their faith in God, the appearance of the Gods, and the name and form of the deities. This variation, which depends on the land, can also be seen. In the Periyapuranam, we find some of the traditions of worship based on the belief in a God that has developed in this way. Although Periyapuranam in particular is the literature that originated and developed in the Middle Ages, the messages for nearly five centuries in them are put together and created. In doing so, we also see Kannappar, who was born into the Hunter clan. We also see some devotees who are Brahmins. Through them, we can see that the worship of minor deities becomes the worship of the great deity and that in the worship of the great deity, the traditions of worship such as sacrificial sacrifice are carried out by many devotees. In the case of the folk deities, Saivism can be seen to have attracted those who were engaged in worship and others. These can also be re-enactments of the Jaina-Saiva struggle that took place in the context of that period. It can be seen that devotees of other religions are also brought together in worship, and those who recite the five letters in a simple manner while showing those who attain to God by learning mantras through the Vedas get the same results. Since ancient times, in the antithesis of the flower and the offer of milk or sacrifice, the style in which Saivism has adopted the pooja with flowers is also known. Periyapuranam is shown to have accepted the worship of many devotees in many contexts, and the Saiva linkage is the way of many modes of worship.

**Keywords:** Periyapuranam, Worship, God, Nomadic Communities

## முன்னுரை

வழிபாடு ஒரு வகையில் இயற்கையில் இருந்தே தொடங்குகிறது. இவ்வியற்கையை மட்டும் வழிபடும் வரை இறைவனின் அற்புதங்கள் இல்லை, தோற்றகதைகள் உண்டாகவில்லை, தெய்வங்களில் ஆண், பெண் சார்ந்த பாலியல் வேறுபாடுகளும் இல்லை. இயற்கை சில அழிவுகளை ஏற்படுத்தும் போது அது கோபம் கொண்டு இருக்கிறது என நம்பினான். இந்நம்பிக்கையே பால்பூசை, பலிபூசை, பூதூவி வழிபடுதல் போன்ற வழிபாடு சார்ந்த நம்பிக்கையை உண்டு பண்ணியது. வெற்றிடத்தை கைகூப்பி வணங்கிய மனிதமனம் அவ்வியற்கையில் இறைவன் இருப்பதாக நம்பியது. இன்றும் கூட சில அச்ச உணர்வு மேலிடும் போது இயல்பாக இறைவனை எண்ணி பொது வெளியில் வணங்கி நிற்றலை காணமுடிகிறது. பின்னாளில் தொடர்ச்சியாக மனிதமனம் பல அற்புதங்களை முன்வைத்தது. மரத்தின் இறைவன் உறைவதாகவும் அதனை வழிபடும் போது நமக்கு வரும் துன்பம் நீக்கும் என்றும் எண்ணினர். இம்மர வழிபாடும் கூட இயற்கை வழிபாட்டின் அடுத்த ஒரு கூறுகளாக கொள்ளலாம். மரவழிபாடு, நடுகற்கள் வழிபாடு என்ற நிலையை காணும் போது வெட்டவெளியில் இயற்கையை வணங்கியதிலிருந்து ஒரு இருப்பிடத்தை கட்டமைக்க முன்வந்ததை அறியமுடிகிறது. நிறுவன சமயமாக அல்லது பெருந்தெய்வ வழிபாட்டில் சைவம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதை பல சைவ பனுவல்கள் முன்னிறுத்துகின்றன. அவ்வகையில் பெரிய புராணம் காட்டும் பல வழிபாட்டு முறைகள் சைவக் கடவுளான சிவபெருமான் ஒருவனே இறைவன் என்பதை முன்னிறுத்தும் நோக்கில் பல வழிபாட்டு முறைகளை குறிப்பாக நாட்டார் தெய்வம், குலதெய்வம் போன்றவற்றை தன்னுள் அடக்கி கொண்ட ஒரு பாங்கினை வெளிப்படுத்துகிறது. இதன் வழியாக பெரியபுராணத்தின் வழிபாட்டு முறைகளையும் மரபுகளையும் கண்டறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## வழிபாட்டு மரபின் தொன்மை

தமிழ் சமூகம் மரபில் இறைவன் பற்றிய கருத்தாடல்கள் என்று தோன்றின என்பது துல்லியமாக கணிக்க முடியாது. கதை மரபில் தெய்வம் பற்றிய புரிதல்கள் இன்றி கூட, பல மரபுக் கதைகள் மூலம் தெய்வம் மற்றும் அதன் வழக்காறுகளை பலரும் பேசி வருவதை மரபு வழி அறிய முடிகிறது. இம்மரபுக் கதைகள் தெய்வங்களின் தோற்றம் பற்றிய கூற்றுகளில் இறைவனின் பிறப்பை அல்லது அற்புதங்களை முன்னெடுக்கிறது. அக்கதை காலம் என்ன? இறைவன் தோன்றியது எத்தனை வருடங்கள் ஆகின்றன? எனில் அதற்கு விடையில்லை. ஏனெனில் மனிதன்படைத்த இறைவனை தோற்றக் கதைகள் மூலம் கண்டு களிக்கலாமே தவிர காலத்தை கணக்கிடுதலும் விவாதிப்பதும் தோற்ற தொன்மங்களில் சாத்தியமற்ற கூறாக இருந்து வருகிறது. ஏனெனில் இறைவனை வழிபடுதலும் வணங்குதலுமான சிந்தனை இன்று நேற்று அல்ல பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருவதை அறிய முடிகிறது. ஏனெனில் அச்சத்தின் காரணமாக வழிபட்ட போதே இறைவன் பற்றியும், நம்மை மீறி ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்ற கருத்தாடல்கள் நிலைபெற்றுவிட்டதை அறிய முடிகிறது. "உலகில் வழிபாடு இல்லாத மனித சமூகம் ஏதும் இருப்பதாக தெரியவில்லை. சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னதாக கணிக்கக் கூடிய குகை ஓவியங்களில் தொன்மையான வழிபாட்டு கூறுகள் காணப்படுவதாக அறிஞர்கள் கூறியுள்ளனர்" என்கிறார் (Ramanathan, 2016).

நமது முதல் இலக்கணமான தொல்காப்பியம்

“மாயோன் மேய காடுறை யுலகமும்

சேயோன் மேய மையுறை யுலகமும்

வேந்தன் மேய தீம்புனல் யுலகமும்

வர்ணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (Tamiilannal, 2021)

என்று ஒவ்வொரு திணைக்குமான தெய்வங்கள் எவையெவை என்பதை வரையறுத்துக் காட்டுகிறது. "இந்த வரையறை எங்கும் விளக்கப்படவில்லை இதனுடைய எந்தப் பகுதியும் வேறெங்கும் மீண்டும் சொல்லப்படவுமில்லை.” என்கிறார் (Nadarajan, 2008). தொல்காப்பியத்தில், கடவுள்களை பரவலாக்கம் செய்யாத சூழல் இருந்தாலும் ஒவ்வொரு திணைக்குமான தெய்வத்தின் மரபுகளை சுட்டிக்காட்டவும் மறக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. "தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட நான்கு கடவுள்களுள், மாயோன் (திருமால் - விஷ்ணு), வேந்தன் (இந்திரன்), வருணன் ஆகிய மூவர், வேதங்களின் அங்கீகாரம் பெற்றவர்கள்." என்கிறார் (Nadarajan, 2008). மேலும் இங்கே குறிப்பிடப்படும் சேயோன் மட்டுமே சிவன், முருகன் என்ற இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. முருகப்பெருமானும் முன்னாளில் திணை சார்ந்த குறிஞ்சி நில கடவுளாக இருந்து பின் நாளில் பெருந்தெய் வழிபாட்டுக்குள் அல்லது நிறுவன சமயமாக்கப்பட்ட ஒரு கடவுளாகவும் காண்கிறோம். இவ்வகையில் தொல்காப்பியத்திலேயே வேத கடவுள்களின் அல்லது பெருந்தெய்வங்களாக கட்டமைக்கின்ற போக்கையும் காண முடிகிறது. தொல்காப்பியத்தில் பரவலாக விளக்கப்படாத தெய்வங்கள் பற்றிய கருத்தாடல்கள் சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே சில பொதுவாக காணப்படுவதும், குறிப்பாக, பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப்படை போன்ற சங்க இலக்கிய பனுவல்களில் இறை வழிபாட்டை காண்கிறோம்.

"சங்க இலக்கியம் பேசும் பண்டைத் தமிழரின் சமயம், வழிபாடு, சடங்குகள் முதலான நடைமுறைகள் பெருங்கற்படைக்கால மக்களின் மூதாதையர் காலத்தில் இருந்தே வருகின்றன இதனை மானிடவியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் (மலோனி, கிளாரன்ஸ் 1975)” என்கிறார். (Bakthvatchala Bharathi, 2020) மானிடவியலாளரான பக்தவத்சலபாரதியின் கருத்தும் வழிபாட்டின் தொன்மையை விளக்கி செல்வதாக அமைகிறது. ஏனெனில் இவ்வுலகத்தைபடைத்தவன் இறைவன் என்று ஒவ்வொரு சமயமும் குறிப்பாக பெருந்தெய்வ மரபுகளில் நம்புவதால் இறைவனின் பிறப்புகதைகளை கணக்கிடல் தகாததாக கட்டமைக்கிறது. அதேபோல வழிபாடு என்பதும் நீண்ட நெடியதாக காட்டப்படுவது அதன் தொன்மையை நிரூபிக்கும் முயற்சியாக கொள்ளலாம். ஏனெனில் மனித சமூகத்தில் வழிபாடு என்பது இன்று நேற்று அல்ல பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே காணப்படுவதை அறிய முடிகிறது.

## மனித பண்பேற்றமும் பால்சாரா தெய்வமும்

தமிழ் சமூகத்தில் மனித பண்பேற்றம் செய்யப்பட்ட தெய்வங்களின் தோற்றம் மற்றும் வழிபாடு என்பது ஒவ்வொரு காலத்திற்கும் மாறுபட்டு கொண்டே வந்திருப்பதையும் இலக்கியங்கள் பதிவு செய்கிறது. குறிப்பாக வேதகால கடவுள்களாக சுட்டிக்காட்டபட்ட பல கடவுள்களும் இன்று வழிபாட்டில் இல்லை. மருதநில திணை கடவுளான இந்திர வழிபாடும் கூட சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் முன்னிலை பெற்று பின் நாளில்அவை,வழிபாட்டில் சில நாட்டுப்புற மக்களால் வழிபடப்படுவதும், மாற்றத்திற்கு உள்ளாகியிருப்பதையும் காணமுடிகிறது. ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்ப மக்களின் நம்பிக்கைகளும் தெய்வங்களும் கூட மாறுகின்றன என்பதை இலக்கியத்தின் வழியும் வரலாற்று குறிப்புகளின் வழியாகவும் அறிய முடிகிறது. அதேபோல சிறு தெய்வமாக, நாட்டார்தெய்மாக வழிபட்டவை பெருந்தெய்வமாக உருவாக்கப்படுவதும், பெருந்தெய்வமாக இருந்த தெய்வம் வேறு பெயர்களை பெறுவதும், சில தெய்வ வழிபாடுகள் மறைந்து போவதுமான போக்கை காண முடிகிறது. பரிணாம வளர்ச்சியில் இவ்வாறான மாற்றங்களும், சில வேளைகளில் வழிபாடு அற்றுப் போவதும் கால சூழலில் காண முடிகிறது. இது காலத்திற்கு ஏற்ப தெய்வங்களும் தெய்வ வழிபாடுகளும் மாற்றத்திற்கு உள்ளாவதை கூறுவதாக அமைகிறது. ஆனால் பொதுவெளியில் தெய்வ நம்பிக்கைகளும் வழிபாடும் தொடர் சங்கிலியாய், அறுபடாத மரபாய் அச்சத்தின் காரணமாக ஏற்பட்ட இயற்கை வழிபாட்டிலிருந்தே தொடர்ந்து கொண்டிருப்பதை காண்கிறோம். தொடக்க காலங்களில் வழிபடப்பட்ட அணங்கு, நீரர மகளிர், சூர் போன்ற சொல்லாடல்களை நாம் சங்க இலக்கியத்தில் இருந்து பெறுகிறோம். இதில் அணங்கு என்பது கூட பொதுவாக ஆண் பெண் என்று வேறுபாடு இன்றி

பொதுவாக வழிபடப்பட்டு வந்திருப்பதை காண்கிறோம்."இயற்கையின் ஆற்றலை வழிபட்டு வந்த தொல் தமிழர்கள் பின்னாளில் மூதாதையர், வீரர்கள் ஆகியோரின் ஆற்றலை வழிபடத் தொடங்கிய போதும் அது பால்சாரா நிலையிலேயே இருந்தது. பின்னர் தான் பால் சார்பும், மனிதப் பண்பேற்றமும் மனித உருவேற்றமும் நிகழ்ந்தன" என்கிறார் (Bakthvatchala Bharathi, 2020).

## நாட்டார் தெய்வமும் நிறுவன தெய்வமும்

மனித பண்பேற்றப்பட்ட தெய்வங்கள், நிறுவன தெய்வங்கள் உருவாவதற்கு முன்பே பல தெய்வ வழிபாடுகள் இருந்துள்ளன. குறிப்பாக, ஆவி வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலக்குறி வழிபாடு, இயற்கை வழிபாடு என பல வழிபாட்டு முறைகளை காண்கிறோம். வழிபாட்டு முறைகளின் பரிணாம வளர்ச்சியே பின்னால் நிறுவன தெய்வங்கள் உருவாவதற்கும் வழி வகுத்தன எனலாம்."ஆவி வழிபாடு, இயற்கை வழிபாடு குலக்குறிபாடு, உயிர்பாற்றல் வழிபாடு, மகிமை பொருள் வழிபாடு, முன்னோர் வழிபாடு, நடுகல் வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு, கந்து வழிபாட்டு என வழிபாட்டு மரபில் நீண்டு விரிந்த படிமலர்ச்சியை காண்கிறோம்" என்கிறார் (Bakthvatchala Bharathi, 2020). பல நிலைகளில் இவ் வழிபாடுகளை எண்ணி பார்க்கும் பொழுது வழிபாடு என்பது ஒரே தெய்வமாக, அன்று முதல் இன்று வரை இருந்ததில்லை. ஒவ்வொரு காலத்திற்கும் தெய்வ வழிபாடு, தெய்வங்கள் என்பது மாறுபட்டுக் கொண்டே இருக்கின்றன. தெய்வ வழிபாட்டை நிறுவன சமயமாக புரிந்து கொள்வதும், நாட்டார் வழிபாடாக புரிந்து கொள்வதுமான இரு வேறு வழிபாட்டு தொடர்ச்சிகளை காண்கிறோம். நிறுவன சமய வழிபாட்டில் பெரும்பாலும் மக்கள் கூட்டத்தை அதிகப்படுத்த முயற்சிக்கும் நோக்கிலான ஒரு வழிபாடாகவும் நாம் அதை கண்டுகொள்ளலாம். பதிகம் பாடுவதும், தலபுராணம் எழுதுவதும், ஆறுகால பூசை, மூன்று கால பூசை என பல திட்டமிட்ட செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதை பார்த்திருக்கிறோம். இவை நிறுவன சமயத்தில் மக்களின் திரள்களை ஒன்று திரட்டுவதற்கும் வழிபட செய்வதற்கும் அச்சமய நிறுவனம் பெருமளவில் உயர்ந்து நிற்பதற்குமான அடித்தளமாக இவைகள் எல்லாம் அமைகின்றன. நாட்டார் வழிபாட்டில் மக்கள் கூட்டத்தை திரட்டுவது என்பது நோக்கமல்ல, ஒரு சிறு குழு கூட ஒரு நாட்டார் வழிபாட்டை செய்துவிடக்கூடும். ஆனால் நிறுவன சமயமாக ஒரு தெய்வம் நிறுவப்பட்ட பிறகு அதனுடான ஒரு கோவில் என்பதும் அதனுடைய மக்கள் கூட்டம் என்பதும் அவசியமாகிறது. இது தொடர்ந்து அடுத்தடுத்த நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு வழிபாடாகவும் இருந்து வருகிறது.

மனித சமூகத்தில் சமயம் பற்றிய கருத்தாடல்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே காணப்படுகிறது. தொடக்க கால மனித சமூகம் இயற்கையை கண்டு பயந்து பணிய ஆரம்பித்தது. நாடோடி சமூகத்தில் கிடைத்ததை உண்டு வந்த மனிதன் இயற்கை சில நேரங்களில் தன் சீற்றத்தை காட்டிய போது, அதனை கண்டு அஞ்சினான். அந்த அச்சத்தின் காரணமாக வணங்கவும் செய்தான். (கலைக்களஞ்சியம்) “வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்விலும் குற்ற உணர்விலிருந்தும் உண்டாகி இருப்பதாக கருதுகிறார்கள்.” என்கிறார் (Josephine Punitha, 2015).

## பெரியபுராணம் காட்டும் வழிபாடு

காதலையும் வீரத்தையும் முதன்மையாகக் கொண்டு பேசிய சங்க இலக்கிய மரபிலிருந்தே இறைவன், வழிபாடு பற்றிய கருத்தாடல்களை ஆங்காங்கே காண்கிறோம். இலக்கியங்கள் காட்டும் பொருண்மைகள் என்பது பொதுவாக மக்களின் வாழ்வியலை மையமிட்டே அமைகிறது. அவ்வாழ்வியல் கூறுகளில் சமயம் மற்றும் வழிபாடு சார்ந்த கூறுகளும் ஒரு பகுதியாக அமைகின்றன. ஆனால் சமய கருத்தையே முன்வைக்கும் பக்தி இலக்கியங்கள் காட்டும் வழிபாடு, இறைவன் பற்றிய கருத்தாடல்கள் என்பது இறைவன் பற்றிய சிந்தனைகளை அல்லது கூறுகளை முன்வைப்பதாக அமைகிறது. அவ்வகையில் பெரியபுராணம் என்பது சைவ இலக்கியமாகும். இச்சைவ இலக்கியத்தில் அடியவர்களின் வழிபாடு, பண்பாடு சார்ந்து அவை எவ்வகையில் இயங்குகின்றன என்பதையும் நாட்டார், பெருந்தெய்வ வழிபாடுகள் என பிரிக்கப்பட்ட இக்காலச் சூழலில் அவ்விலக்கியம் இரண்டையும் எவ்வகையில் ஒன்று படுத்தியும் அல்லது வேறுபடுத்தியும் காட்டியுள்ளது என்பதோடு

சமய அல்லது வழிபாட்டு முறைகளை ஒன்று திரட்டுவதற்கான தேவை என்ன என்பதாகவும் ஆராய வேண்டியது அவசியமாகிறது. அவ்வகையில் பெரியபுராணத்தில் தெய்வங்கள் பற்றிய கருத்தியலும், அதன் ஊடான வழிபாடுகளும், பக்தி நெறியும் எல்லா அடியார்கள் மத்தியிலும் நிறைந்து இருப்பதை சைவ இலக்கியமான பெரியபுராணம் காட்டுகிறது. ஆனாலும் பெரியபுராணம் எவ்வகையான வழிபாட்டு நெறியை முன்வைக்கிறது? அது எவ்வகையான வழிபாடுகளை எல்லாம் ஏற்கிறது? அடியார்களின் வழிபாட்டு மன நிலையின் வாயிலாக மற்றவர்களுக்கு சொல்லும் செய்தி என்ன? அவை மாற்றுச் சமய இணைப்பு சார்ந்து இயங்குகிறதா? என பல நிலைகளில் அறிய வேண்டியது அவசியமாகிறது.

பொதுவாக அடியார் வாழ்வில் இறைவனை அடைதலே முதன்மையானதாக இருந்தாலும் அதற்கு அவர்கள் பயன்படுத்தும் வழிகள் என்பது பலவாறாக உள்ளது. பலவகையான தொண்டுகள் வழி அவற்றை அடைய முற்படுகின்றனர். குறிப்பாக அடியவர்களுக்கு கோவண ஆடை கொடுத்த அடியாரையும், குங்கிலியம் கொடுத்த அடியாரையும், உணவிடுதலையே முதன்மை அறமாகக் கொண்டு தொண்டு செய்த அடியார்களையும் காணும் போது ஒவ்வொருவரின் தொண்டு என்பது வெவ்வேறு விதமாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது. இவர்கள் எல்லோருடைய தொண்டும் வெவ்வேறாக அமைந்தாலும் பொதுவாக இறைவன் மீதான அன்பினால் ஒன்று படுபவர்களாக காட்டப்படும் இவர்களின் வழிபாடும், வணக்கமும் பற்றி அறிய வேண்டியதும் அவசியமாகிறது. குறிப்பாக வழிபாட்டினாலே அடையாளம் காணப்பட்ட சில அடியார்களை தொகுத்து காண்பதும் அவர்களின் தனித்துவத்தை காட்டுவதோடு வழிபாட்டு மரபையும் அறிந்து கொள்ள ஏதுவாக அமைகிறது. பெரியபுராணத்தில் பூ சொரிந்து வழிபடுதல், விளக்கேற்றி வழிபடுதல், தொன்மை கதையாடல் வழிபாட்டு மரபு, மனதால் வழிபடுதல், மந்திரம் மற்றும் யாகங்கள் வழி வழிபடுதல், மாற்றுச் சமய அடியர்களின் வழிபாடு என பல நிலைகளை காண முடிகிறது.

## இரு வேறு வழிபாட்டு நெறிகள்

கண்ணப்பநாயனார் புராணத்தில் ஆகம முறையிலான வழிபாட்டு முறையும் பக்திநெறி அல்லது அன்பினால் விளைந்த வழிபாட்டு முறையுமாக இரு வேறு முறைகள் கூறப்படுகின்றன. பல நாளும் ஆகம முறைப்படியே பூசனை செய்யக்கூடிய சூழலில் புதிதாக வந்து சேரும் திண்ணனாரோ குடுமிதேவருக்கு தாம்வேட்டையாடிய இறைச்சியையும் வெந்துள்ளனவா என மென்று பார்த்து படைக்கிறார். வாயில் திருமஞ்சன நீரும், தலையில் பூக்களும், இலையில் இறைச்சியும் எடுத்து வந்து படைக்கிறார். இதற்கு முன்பு கண்டிராத குடுமித்தேவரின் மீது அளவு கடந்த அன்பு ஏற்படுகிறது. பூசனை முறைகளை அறிந்திடாத திண்ணனார் இறைச்சி படையலோடு பூசனை செய்கிறார். மாறாக சிவகோச்சாரியார் ஆகம முறைப்படி பூசி செய்கிறார். இங்கு இருவேறு பூசனை முறைகள் மாற்றி, மாற்றி செய்யப்படுகிறது. பெருந்தெய்வ அல்லது நிறுவன சமயங்களில் சைவ உணவு முறையே பிரதான இடத்தை பிடித்திருப்பதை அறிவோம். சங்க மரபில் வெறியாட்டு நடத்தப்பட்ட முருக வழிபாடு கூட இன்று பலி ஏற்காத பெருந்தெய்வ வழிபாட்டு அல்லது ஆகம வழிபாட்டுக்குள் ஐக்கியமாகியுள்ளது. அவ்வகையில் சைவ கடவுளுக்கு பன்றி மாமிசம் படையல் வேடர் இன மக்களின் உணவு பண்பாட்டில் ஒரு அங்கமாக இருப்பதையும், வேடர் போன்ற நாட்டார் மக்களுக்கு சைவ கடவுளை அறிமுகப்படுத்தும் போதே மாமிசப் படையலை ஏற்றுக்கொள்வது போல் காட்டப்படுவது நாட்டார் அல்லது சிறு தெய்வ வழிபாட்டினரை பெருந்தெய்வ அல்லது ஆகம முறையிலான வழிபாட்டை நோக்கி நகர்த்தும் அல்லது இணைக்கும் மரபாகக் கொள்ளலாம். ஆகம முறையிலான பூசையை இதுவரை கண்டிராத திண்ணனார் வாயில் நீரை கொப்பளிப்பதும், தன் தலையில் சூடிய பூவை இறைவனுக்கு பூசைபொருளாக பயன்படுத்துவதை மட்டும் எங்ஙனம் கண்டறிந்தான்? ஏதும் அறியாதவனா கண்ணப்பன்? முன் அனுபவம் இருந்ததாலேயே நீரும், பூவும் இறைவனுக்குரியதென எடுத்துக் கொண்டான். இப்பூசனை அல்லது வழிபாட்டின் வழியே கண்ணப்பர் எனும் சிறப்பு பெயரும் பெறுகிறான் .உண்மையில் திண்ணன் கண்ணப்பனாவதும், வாயில் உமிழ்ந்து நீரை பெறுவதும், சூடி பூவை ஏற்பதும், மாமிச படைப்பை அன்பினால் ஏற்பதாக அமைவதும், ஆறே நாளில் இறைவன் காட்சியை காண்பதும் இருவேறு வழிபாட்டு மரபுகளை இணைக்கும் அல்லது ஒன்றாக்கும் வழியாகவே எண்ணத் தோன்றுகிறது.

## பூ மற்றும் மலர் வழிபாடு

சண்டேசுவர நாயனார் புராணத்தில் தாமே மணலினால் சிவலிங்கம் அமைத்து பூ மற்றும் பாலினால் வழிபாடு செய்கிறார். பூவினால் வழிபாடு செய்தல் என்பது பண்டைய கால முதல் இன்று வரை இருந்து வரும் ஒன்றாகும். பால் பூசை மற்றும் பலி பூசை என்ற இருவேறு எதிரிணைகளில் இன்று நிறுவன அல்லது பெருந்தெய்வ மரபு பூ, பால் பூசையை ஏற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கழர்சிங்க நாயனாரின் துணைவியார் இறைவனுக்கான மலரை மோந்ததனால் மூக்கை அறுப்பதும், கையை வெட்டுவதும், சிவகாமியாண்டார் பூக்கடையை சிதைத்த பட்டத்து யானையை எரிபத்தநாயனார் வெட்டுவதும், பாகர்களை வெட்டுவதும், தமது பட்டத்து யானையை வெட்டிய எறிபத்தரிடம் அதன் உரிமையாளரான தாமும் குற்றவாளியே என்று தம்மையும் வெட்டுமாறு புகழ்ச்சோழர் பணிவதும், சண்டேசுவரர் பூ மற்றும் பாலால் தாம் வழிபட்ட சிவபூசையை தடுத்த தந்தையின் காலை வெட்டுவதும் சிவனுக்குரிய இப்பூ வழிபாட்டை மையமிட்டே அமைகிறது. பெருந்தெய்வ மரபுகளில் பலியிடல் முறை ஏற்காது பூ மற்றும் பாலுமான பொருட்கள் வழிபாட்டு பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போது நாட்டார் தெய்வ வழிபாட்டில் பலியிடல் முறையே அதன் அடையாளமாக நின்று விட்டதையும் காணமுடிகிறது. பொதுவாக பலி ஏற்கும் தெய்வங்கள் சிறுதெய்வங்கள் என்றும் பலி ஏற்காத தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் என்பதான கருத்தியல் நிலவுவதைக் காணலாம். நாட்டார் மரபில் பூவழிபாடு இன்னும் உள்ளதெனினும், பெருந்தெய்வ அடையாளமாக அது மாறும் பொழுது இன்னும் அதிகப்படியான புனிதம் பெற்று விடுவதையும் காணமுடிகிறது.

## மனதால் கோயில் கட்டுதலும் வழிபடுதலும்

பூசலார் நாயனார் கோயில் கட்டி குடமுழுக்கு செய்து நீராட்ட விரும்பினார்.பொருளற்ற நிலையில் தன் மனதிலே கோயில் கட்டி வழிபடலானார். பொருளற்றநிலையில் கோயில் கட்ட பூசலார்க்கு ஆசை வந்ததும், அக்கோயிலுக்கு இறைவன் குடிப்புகுவதாக பல்லவ மன்னனுக்கு சென்று சொல்வதும் இறைவனுக்கும் அடியார்களுக்குமான இணைப்பு என்பது பொருளியல் சார் காரணங்களால் விலக்கப்படக்கூடாது என்பதை காட்டும் விதமாகவே அமைகிறது. அக்காலச் சூழலில் சமயம் வளர்ப்பின் தேவையும் அவை பொருளற்ற சூழலில் தடைபட்ட கூடாது என்ற தன்மையையும் அதன் ஊடாகவே புரிந்து கொள்ள முடிகிறது. வாயிலார் நாயனார் என்பவர் மனதில் கோவிலாக்கி அதில் இறைவனை எழுந்தருள செய்து, ஞானமாகிய விளக்கு ஏற்றி, மலர் தூவி, அன்பு என்னும் அமுது படைக்கிறார் என்ற வழிபாடு மரபு இதனூடே எண்ணத்தக்கது.

## விளக்கேற்றி வழிபடுதல்

நமிநந்தியடிகள் விளக்கேற்ற நெய் இல்லாததால் சமணர்களிடம் நெய் கேட்க, கையிலே கனலுடைய கடவுளுக்கு விளக்கு எதற்கு? இங்கு நெய் இல்லை நீரை முகந்து விளக்கெரியும் என்றார். அவ்வாறே நீரால் விளக்கு ஏற்றுகிறார். இறைவனின் கருணையினால் குளத்து நீரும் எரிகிறது. இறைவன் வழிபடுதலில் நெய் இல்லாமையாலும் இங்கு வழிபாடு தடைபெறவில்லை. இவரை போலவே கணம்புல்லாரும் விளக்கேற்றி வழிபாடு செய்ததாக புராணம் காட்டுகிறது.

## மந்திரங்கள் உச்சரித்தல் வழி வழிபாடு செய்தல்

உருத்திரபசுபதியார், ஆனாய நாயனார், நேச நாயனார், சோமாசிமார நாயனார் இவர்கள் தொண்டு பல செய்தாலும் மந்திரம் ஓதி வழிவழிபட்டவர்கள். நிறுவன சமயம் மரபில் ஒவ்வொரு சமய கடவுளுக்கும் ஐந்து எழுத்து மந்திரம், எட்டெழுத்து மந்திரம், வழிபாட்டு முறைகள் என பல உண்டு. பல நேரங்களில் வேதம் படித்து அதன் வழி மந்திரம் உபதேசம் செய்தும், உச்சரித்தும் இறைவனின் அருள்தன்மையை வெளிப்படுவதை விட இறைவனின் நாமங்களை உச்சரித்தாலே போதும் என்பர். அவ்வகையில் அடியார்கள் ஐந்தெழுத்தை ஓதியே இறைவனை அடைகிறார்கள். இது பெருந்தெய்

வழிபாட்டில் பல வேதங்களையும் மந்திரங்களையும் பாராயணம் செய்ய முற்படுவதாக காட்டுவதும், பஞ்சாட்சரம் போன்ற மந்திரங்களையும், வழிபாடுகளையும் மரபு ரீதியானதாக காட்டுவதும் அத்தெய்வம் வளமைச் சார்ந்தாக காட்ட முற்படும் முயற்சியாகவும் கொள்ளலாம். அதே வகையில் எல்லோரும் இதனைப் படித்து பொருள் கொள்ளல் இயலாத காரியம். அவர்களுக்கு இறைவனின் நாமமே போதுமென இலகுப்படுத்துவது வழிபாட்டோடு சமய வளர்ப்புமாகும்.

## தொன்மக் கதையாடல் வழி வழிபாட்டு மரபு

கோட்செங்கட்சோழ நாயனார் புராணத்தில் யானையும், சிலந்தியும் சிவபெருமானை வழிபாடு செய்தல் கூறப்படுகிறது. புராண கதையாடலில் அல்லது தொன்மக்கதையாடலில் மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளும் பிற உயிரினங்களும் கூட இறைவனைத் தொழுது வழிபடுதல் கூறப்படுவது, தொன்ம கதையாடல்களில் இயல்பானதாக அமைகிறது. குறிப்பாக சமயம் தொடர்பான தொன்மங்கள், பிறப்பு இறப்பு குறித்த அற்புதங்கள், வழிபடல் போன்ற தன்மைகளை காட்டுவது இயல்பானதாகும். மனிதர்கள் மட்டுமின்றி அனைத்து உயிர்களும் இறைவனின் வழிபாட்டில் ஒன்றிணைவராக காட்டுவது அச்சமய பரிமாணத்தைகாட்டுவதன் ஒரு குறியீடு எனலாம்.

## மாற்றுச் சமய அடியார்களின் வழிபாட்டு மரபுகள்

மாற்றுச்சமய அடியாரான சாக்கிய நாயனார் வழிபாடு என்பது கல் எறிந்து வழிபடுதல் ஆகும் .வெளிநபர்களுக்கு பௌத்தராக தெரியினும் மனதளவில் சிவனையே தொழுவதற்குரிய இறைவனாக ஏற்றுக் கொண்ட பாங்கினை அறியலாம். சமண சமய சமயங்கியாய் பேருபெற்ற அப்பர் சைவராகி, கோவில், தொண்டு, உழவாரப் பணி என்பதன் வழிபாட்டை நேர்த்தியாக செய்கிறார்.

## முடிவுரை

பல காலம் தொட்டு வழிபாடும், வணங்குதலும் காணப்படுகின்றன. இவை பல காலங்களில் ஒரே விதமாக இருந்ததில்லை. ஆதி மனிதனின் அச்சத்தின் காரணமாக வழிபட முனைந்த காலம் தொட்டு இயற்கை வழிபாடு,ஆவி வழிபாடு, முன்னோர் வழிபாடு, மர வழிபாடு, நடுகல் வழிபாடு, நாட்டார் வழிபாடு எனத் தொடரும் வழிபாட்டு முறைகளில் நிறுவன சமயங்கள் தம் ஆதிக்கத்தையும், வளர்ச்சியையும் கட்டமைக்க தவறவில்லை. பெரியபுராணம் இடைக்காலத்தில் கட்டமைக்கின்ற வழிபாட்டு முறைகள் பரிணாமத்தால் வளர்ச்சி பெற்று வந்த நாட்டார் போன்ற பல வழிபாடுகளை பெருந்தெய்வ வழிபாட்டில் தன்னுள் கிரகித்துக் கொள்ள முற்பட்டதையும் பல வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுவதையும் காணமுடிகிறது.

## References


Bakthvatchala Bharathi, (2020) Panndayath Tamil Panpadu Manidaviyal Nokkil Sanga Ilakkiyam, Adayalam Pathippagam, Trichy, India

Josephine Punitha, A. (2015) Manudaviyal Nokkil Agathinai Marabukal, Bharathidasan Univeristy College for Women, Thanjavur, India

Nadarajan, T.S. (2008) Tamilakathil Vaithiga Samayam Varalarum Vakkanaikalum, New Century Book House, Chennai, India

Ramanathan, R. (2016) Tamilar Valipattu Nattupurath Theiva Valipattu Aivu, Meyyappan Pathippagam, Chidambaram, India

Tamiilannal, (2021) Tholkappiyam, Sellappa Pathippagam, Madurai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License